**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08022023-6735

Volume: 8

Issue: 2

Month: October

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 07.08.2023

Accepted: 14.09.2023

Published: 01.10.2023

Citation:
Muthupandi, V. "Vazhga Vazhga – The Root of Caste and the Indigestible Change of Time." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 2, 2023, pp. 96–99.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i2.6735

*Corresponding Author:
muthu58pandi@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Vazhga Vazhga – The Root of Caste and the Indigestible Change of Time

**V. Muthupandi**
*Reg. No. MKU21FFOL997, Ph.D., Scholar,*
*American College, Tamil Research Centre, Madurai*
*https://orcid.org/0000-0003-0974-6362*

**Abstract**
In his very first novel (Koveru Kazhuthaigal, 1994), he became an inescapable personality in modern Tamil literature. Within a year of the novel's release, there was a lot of buzz. At a time when Dalit literature, Dalit culture and Dalit politics were the subject of debate, Kriya published the novel ' Koveru Kazhuthaigal '. Raj Gouthaman has made a scathing and critical comment on this novel in his book 'Poi-Abhatham - Vunmai. However, it is worth noting that even today this novel is nearing a quarter of a century in publication. No matter what form we write in the form of a short story, a short novel, a novel, every one of his works contains a story about a life that we generally miss. He can continue to write at the centre where he works as a teacher. Koveru Kazhuthaigal (1994), Arumugam (1999), Sedal (2006), Engade (2015), Chellathapanam (2018), and Ippothu Uyirodu Irukiren (2022). In particular, it is more appropriate for him to refer to the characters themselves, not the characters in his writings. Each of the protagonists will emerge as the representative of the community. Therefore, this article is to examine the short novel 'Long Live' of the Centre, which has emerged as a political copy.

**Key Words:** Vazhga Vazhga, Dalit Literature, Dalit Culture, Dalit Politics, Caste Politics, Party Politics, Women's Politics.

**References**

1. Imaiyam, Vazhga Vazhga, Kriya Publishing House, Chennai, First Edition, June-2020.

# வாழ்க வாழ்க நாவலில் சாதியின் வேரும் செரிக்க முடியாத கால மாற்றமும்

**ஊ. முத்துப்பாண்டி**
முனைவர் பட்ட ஆய்வாளர், அமெரிக்கன் கல்லூரி
தமிழ் உயராய்வு மையம், மதுரை

*இமையம் தன்னுடைய முதல் நாவலிலேயே (கோவேறு கழுதைகள், 1994) தற்கால தமிழிலக்கியத்தில் தவிர்க்க முடியாத ஆளுமையாக உருவாகினார். அவருடைய கதாமாந்தர்கள் சமூகத்தின் பிரதிநிதியாக வெளிப்படுகின்றனர். அரசியல் பிரதியாக வெளிவந்துள்ள இமையத்தின் "வாழ்க வாழ்க' எனும் குறுநாவல் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.*

## அறிமுகமும் பின்னணியும்

விருத்தாசலத்திலும், சேலத்திலும் 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது அன்றைய முதல்வர் ஜெயலலிதா பங்கேற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்து கொண்ட நான்கு பேர் வெயில் தாங்காமல் உயிரிழந்தனர். அதனோடு நெரிசலில் சிக்கிய பதினேழு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர் என்கின்ற உண்மைச் சம்பவத்தைப் பின்புலமாகக்கொண்டு புனையப்பட்ட குறுநாவல் தான் "வாழ்க வாழ்க' எனும் படைப்பு. ஒரு நாள் அரசியல் கூட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது மக்களின் அவல நிலையே இக்குறுநாவல். இந்நூல் சமகால அரசியல் கட்சிகளின் (அதிமுக, திமுக) செயல்பாடுகளைப்பற்றி பேசுகிறது. குறிப்பாக, ஆளும் கட்சியின் (அதிமுக) முந்தைய நிலை, பிந்தைய நிலையென இருவேறு திசைகளில் நாவல் நகர்கிறது. சாதியரசியல், கட்சியரசியல், பெண்ணரசியல் மற்றும் காலமாற்றத்தைச் செரிக்க முடியாத சமூகம் இந்நாவலின் மைய சரடுகளாகக் காணப்படுகின்றது.

நாவலில் வெயிலின் தாக்கம், தண்ணீர் தாகம், அரசியல் கூட்டத்திற்கு அழைத்துச் செல்லப்படும் பெண்களுக்கென்று கழிப்பறை அமைக்காமல்கூட்டம்நடத்தும்அவலநிலை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஐந்நூறு ரூபாய்க்கு ஆசைப்பட்டு வந்து நகையை இழந்த பெண்கள், சீக்கிரம் வந்துவிடுவதாகச் சொல்லி வீட்டையும் மாட்டையும் குழந்தைகளையும் விட்டு வந்த பெண்களின் பரிதவிப்பு, பணத்திற்காக வந்திருக்கும் ஏழ்மை நிலையிலும் தனக்குச் சமமாகப் பறத்தெருவைச் சேர்ந்த பெண் உட்காருவதா என்று சண்டை பிடித்து அவளைக் கீழே தள்ளிவிட்டு அந்த இடத்தைவிட்டுத் துரத்தும் சாதிய வன்மத்தைப் பிரயோகிக்கும் நிலை நாவல் முழுவதும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

## சாதியரசியலும் அரசியலில் சாதியும்

சின்னக்கண்டியாங்குப்பத்தில் தான் என்றில்லை பெரிய கண்டியாங்குப்பத்திலும், அதனுடைய சுற்றுவட்டாரம் எங்கும் அவனுடைய சாதிக்காரர்கள் தான் அதிகம். ஆளும் கட்சியாக இருந்தாலும் எதிர் கட்சியாக இருந்தாலும்.[1] என்று நாவலில் இப்படிய விவரணை இடம்பெற்றுள்ளது. இந்தியாவில் வட மாநிலங்களில் மத ரீதியிலான அரசியல் நிலைபாடுகள் எடுக்கப்படும். ஆனால், தமிழ்நாட்டில் சாதியின் அடிப்படையில் தான் அரசியல் மட்டுமல்ல எல்லா இடங்களிலும் நடைபெறுகின்றன. எனவே தமிழகத்திலுள்ள கட்சிகளின் நிலைபாடுகள் பெரும்பாலும்

சாதியரீதியான அணுமுறையைத் தான் கடைபிடிக்கிறார்கள் என்று இந்நூல் காத்திரமாகப் பதிவுசெய்துள்ளது.

இதுவரை "பொது' என்ற கருத்தமைவில் இயங்கிக்கொண்டிருக்கும் அரசியல் சொல்லாடல்களை எளிமையாக உடைத் தெரிகிறார் இமையம். 'பொது' என்றகின்ற கருத்தமைவின் பிற காரணிகளான தேசம், மொழி, இனம் ஆகியவற்றையெல்லாம் உடனடியாகக் கலைக்கக்கூடிய தன்மை சாதிக்கு இருக்கிறது என்ற அடிப்படை உண்மையைச் சுட்டிகாட்டியுள்ளார்.

இந்நூலில் காலமாற்றம் என்பது முக்கியமான பகுதியாகும். காலமாற்றம் வெளிப்படையாகக் காட்டாவிட்டாலும் உரையாடல்களில் நிகழ்த்தியுள்ளார். இடைநிலை சாதியினரின் பார்வையில் காலமாற்றம் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். தலித் மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றம் என்பது பொது என்ற அமைப்பிற்குள் வந்த விளைவாகும். குறிப்பாகப் பேருந்து, தியேட்டர், பள்ளிக்கூடம்உள்ளிட்ட இடங்களில்தலித், தலித் அல்லதோர் இடையே ஏற்படும் சந்திப்பைத்தலித் அல்லதோர் ஏற்க முடியாத நிலையை ஒவ்வொரு நிலையிலும் வெளிப்படுத்துகிறார்கள் என்பதையும் இமையம் சுட்டிக்காட்டியுள்ளார். சான்றாக, இப்பதான் எல்லாச் சனியனும் இந்த மாதிரி பண்ணுதுவோ, முன்னயெல்லாம் இப்படியில்ல.[2]

பொது இடங்களில் கூட சாதி படிநிலை கடைபிடிக்கப்படுகிறது. என்பதனை நாவலில் பதிவுசெய்துள்ளார்.

கூட்டத்துல வந்து ஒக்காந்தாலும் சாதி வித்தியாசம் இல்லாம ஒக்காந்திருவியா?.[3]

பவழங்குடியா இருந்தாலும் நீ பறத்தெரு. ஊரு வேற, பறத் தெரு வேற.[4]

கூட்டத்துக்கு வந்திட்டாப்புல சாதி இல்லாம போயிடும்ன்னு நெனச்சிக்கிட்டா போலயிருக்கு.[5]

கட்சிக்குள்ளையும் சாதி வேர் விட்டிருக்கிறது அதனால் கட்சி பதவிகளில் மேலிடத்தைப்பிடிப்பதற்கானஎத்தனிப்பும் உருவாகிறது. கட்சி, திரைப்படம் என்கின்ற பொதுவாக இருந்தாலும் அதில் முக்கிய பதவிகளில் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் தான் தலைவர்களாக இருப்பார்கள்.

ஒரு கட்சி சாதியை மட்டும் கருப்பொருளாக வைத்து இன்றுவரை தன்னுடைய இருத்தலை வலுபடுத்திக் கொண்டே இருக்கிறது. இந்தப் பிரதி தரும் வாசிப்பு என்பது, ஆளுங்கட்சியின் இயல்பைத் தோலுரிப்பதாக இருந்தாலும் கூட கட்சியில் பதவி எந்த சாதிக்காரனுக்குக் கொடுக்க வேண்டும் என்ற மனநிலை இருப்பதாக இப்பிரதியின் வாயிலாகப் புரிந்துகொள்ள முடியும். சமகால அரசியலில் உள்மெய்யாக இருக்கும் சாதிக்கூறுகளின் வெளிப்பாடு களை புரிந்துகொள்ள இப்பிரதி உதவியாக இருக்கிறது.

**வெகுமக்கள் உளவியலும் சுற்றுச்சூழல் சீரழிவும்**

அரசியல் கூட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் பார்வையில் இந்நாவல் நகர்கிறது. அரசியல் கூட்டத் திற்கு எப்படி திரட்டப்படுகின்றன என்பது திரட்டுகிறவர்களுக்கு மட்டுமல்ல. அந்தக் கூட்டங்களுக்குப் போகிறவர்களுக்குத் தெரியும். ஆனாலும் கூடத் தங்களைத் தாங்களே கூட்டமாக, ஊடகங்களில் காட்சியாகப் பார்க்கிறபோது அந்தக் கூட்டம் திரட்டப்பட்ட சூட்சுமங்கள் அவர்களுக்கு மறந்து போய்விடும். மிகப் பிரமாண்டமான மேடை, அலங்கரிக்கப்பட்ட தோரணங்கள், வழிநெடுகப் பதாகைகள் என்ற

பொருட்களின் வழி வெகுமக்கள் உளவியல் தீர்மானிக்கப்படுகிறது.

அரசியல் கூட்டத்திற்குகாகப் பல ஏக்கர் மரங்களை அழித்துப் போடப்பட்ட பிரமாண்ட மேடை, பல வண்ணத் தோரணங்கள், பதாகைகள் ஆயிரக்கணக்கான இருக்கைகள் என்று தங்கள் செல்வாக்கையும் தங்கள் ஊரில் கட்சியின் செல்வாக்கையும் தலைவிக்குக் காட்டுவதற்கான அரசியல் வாதிகளின் மெனக்கெடல்கள் எழுத்து வழியே கண்முன்னே காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

தனிமனித வருகைக்காகப் பல்லாண்டுகள் வளர்க்கப்பட்டதும் வளர்ந்ததுமான மரங்கள் வெட்டப்படும் சுற்றுச்சூழல் பிரச்சினையையும் வெகுநுட்பமாக கவனப்படுத்தியுள்ளார் இமையம்.

சாதியப் படிநிலை குறித்து ஒரே மாதிரியான பிம்பம் திரும்பதிரும்ப சொல்லப்பட்டு வந்ததை இக்குறுநாவல் உடைக்கிறது. பட்டியலினத்தைச் சேர்ந்த பெண்கள்தான் கூட்டங்களுக்குக் கூலிக்குப் போகிறார்கள் என்று பெரும்பாலோர் கருதிக்கொண்டிருக்கிறார்கள். அது முழு உண்மை அல்ல, இடைநிலை சாதிக்களைச் சேர்ந்தவர்களும் அப்படி அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என்பதை இந்நூல் வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

இமையம் இதுவரை எழுதி வந்ததலிருந்து முற்றிலும் வேறொரு தளத்தில் இக்குறுநாவல் எழுதப்பட்டுள்ளது. அரசியலையும் சாதி படிநிலைகளையும் விவரித்துள்ளார். குறிப்பாக, ஆண்களும் அரசியல் கூட்டத்தில் கலந்துகொண்டாலும் பெண்களின் உளவியலை மையப்படுத்தியே இந்நாவல் எழுதப்பட்டிருக்கிறது. நவீன வாழ்முறையில் தலித்துக்கள் தங்களை வெகுவாக இணைத்துக் கொள்வதற்குக் தீவிரமாகச் செயல்படுகிறார்கள். நவீனம் என்று வரையறை செய்யக்கூடிய புதிய, தற்கால நடைமுறைகள் சார்ந்த, சமகாலத் தேவைகளுக்கு ஏற்ப பொருந்திப்போகிற கருத்து நிலைகளை அவர்கள் இப்போரட்டங்களுக்கு ஆதரமாகக் கொண்டிருக்கின்றனர். ஆனால், தலித் அல்லாதவர்களின் சிந்தனை பழைமையானதா இருக்கிறது என்கிற விதத்தில் இமையத்தின் எழுத்துக்கள் அமையப் பெற்றுள்ளன.

## குறிப்புக்கள்

1. இமையம், வாழ்க வாழ்க, ப.14.
2. மேலது, ப.36.
3. மேலது, ப.33.
4. மேலது, ப.37.
5. மேலது, ப.38.
6. மேலது, ப.93

## துணைநூற்பட்டியல்

1. இமையம், வாழ்க வாழ்க, க்ரியா பதிப்பகம், சென்னை, 2020.